ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

ஆர்யதர்மம்.

प्राणाघातान्निवृत्तिः परधनहरणे संयमस्सत्यवाक्यं
काले शक्त्या प्रदानं युवतिजनकथा मूकभावः परेषाम् ।
तृष्णा स्रोतो विभङ्गो गुरुषु च विनयस्सर्वभूतानुकम्पा
सामान्यं सर्वशास्त्रेष्वनुपहतविधिः श्रेयसामेष पन्थाः ॥ भर्तृहरिः।

ப்ராணாகாதாந்நிவ்ருத்தி: பரதநஹரணே ஸம்யமஸ்ஸத்ய வாக்யம் காலே ஶக்த்யா ப்ரதாநம் யுவதிஜநகதா மூகபாவ: பரேஷாம் । த்ருஷ்ணா ஸ்ரோதோ விபங்கோ குருஷு ச விநயஸ்ஸர்வபூதாநுகம்பா ஸாமாந்யம் ஸர்வஶாஸ்த்ரேஷ்வநுபஹதவிதி: ஶ்ரேயஸாமேஷ பந்தா: ॥ பர்த்ருஹரி:॥

பிராணிஹிம்ஸை செய்யாமல் இருக்கவேண்டும். பிறர்பொருளை இச்சிக்காமல் மனத்தை அடக்கவேண்டும் எப்பொழுதும் உண்மையையே உரைக்கவேண்டும் புண்யகாலங்களில் தம்சக்திக்கியன்றவரையில் ஈதல் வேண்டும். பிறருடையமனைவியின் கதையைப்பேசாமல் மௌனம்ஸாதிக்கவேண்டும். உசிதமாயிருக்கவேண்டிய அளவிற்கு அதிகம்பெருகும்ஆசையென்கிற பிரவாஹத்தைவிடாமல் அணைபோடவேண்டும். பெரியோர்களிடம் மரியாதையுடனும் வணக்கத்துடனும் இருத்தல்வேண்டும். சகலப்பிராணிகளிடமும் கருணைபாராட்டவேண்டும். இவ்விதமிருப்பின் ஸர்வசாஸ்திரங்களுடைய அபிப்பிராயத்திற்குற்றதாயும் மெம்மேலும் அதிகமான சிரேயஸ்ஸைப் பெறுவதற்கு இதுவே சிறந்தநெறியாகவும் ஆகும்.
இங்கு கூறப்பட்ட தர்மங்கள்யாவும் ஒவ்வொருவரிடமும் அவசியமிருக்கவேண்டும் இந்த அபிப்பிராயத்தையே கீதாசாஸ்திரத்திலும்

अभयं सत्वसंशुद्धिर्ज्ञानयोगव्यवस्थितिः ।
दानं दमश्च यज्ञश्च स्वाध्यायस्तप आर्जवम् ॥
अहिंसा सत्यमक्रोधस्त्यागश्शान्तिरपैशुनम् ।
दयाभूतेष्वलोभत्वं मार्दवं ह्रीरचापलम् ॥
तेजः क्षमा धृतिश्शौचमद्रोहो नातिमानिता ।
वदन्ति संपदं दैवी मभिजातस्य भारत ॥ इति ।

அபயம் ஸத்வஸம்ஶுத்திர்ஜ்ஞாநயோகவ்யவஸ்திதி: । தாநம் தமஶ்ச யஜ்ஞஶ்ச ஸ்வாத்யாயஸ்தப ஆர்ஜவம் ॥ அஹிம்ஸா ஸத்யமக்ரோதஸ்த்யாகஶ்ஶாந்திரபைஶுநம் । தயாபூதேஷ்வலோபத்வம் மார்தவம் ஹ்ரீரசாபலம் ॥ தேஜ: க்ஷமா த்ருதிஶ்ஶௌசமத்ரோஹோ நாதிமாநிதா । பவந்தி ஸம்பதம் தைவீமபிஜாதஸ்ய பாரத ।

என்று விரிவாகக்கூறி இவையாவும் தெய்வஸம்பத்தென்றும் இந்த ஸம்பத்தை அடைந்திருப்பவர்கள் ஸம்ஸார துக்கத்தைச் சீக்கிரம் போக்கி மோக்ஷத்தைப்பெறத் தகுதியுள்ளவர்களாகிறார்களென்று ஸ்ரீ கண்ணபிரானும் திருவாய்மலர்ந்தருளியிருக்கிறார்.

உபபத்ராதிபர்.

170

ஸ்த்ரீ தர்மம்.

(௧௧௪-வது பக்கத்தொடர்ச்சி)

விவாகமானபிறகு தன்புருஷன் குருடனுயிருந்தாலும் புத்தியில்லாதவனுயிருந்தாலும் கெட்டகார்யங்களிற் பற்றுதலையடைந் திருப்பினும் அவனை உதாஸீநம் செய்யாமல் பக்தியுடன் ஆராதிக்கவேண்டும் என்று:—

कुरूपो वा कुवृत्तो वा दुःस्वभावोऽथ वा पतिः ।
रोगान्वितः पिशाचो वा मद्यपः क्रोधनोऽपि वा ॥
वृद्धो वाथ विदग्धो वा मूकोऽन्धो बधिरोऽपि वा ।
रौद्रोवाथ दरिद्रो वा कदर्यः कुत्सितोऽपि वा ॥
कातरः कितवोवापि ललनालम्पटोऽपि वा ।
सततं देववत्पूज्यः साध्व्या वाक्कायकर्मभिः ॥
अहङ्कारं विहायाथ कामक्रोधौ च सर्वदा ।
मनसो रञ्जनं पत्युः कार्यमन्यस्य वर्जनम् ॥ व्यासः ॥

குரூபோ வா குவ்ருத்தோ வா து:ஸ்வபாவோऽதவா பதி: ।
ரோகாந்வித: பிசாசோ வா மத்யப: க்ரோதநோऽபி வா ॥
வ்ருத்தோ வாத விதக்தோ வா மூகோऽந்தோ பதிரோऽபி வா ।
ரௌத்ரோ வாத தரித்ரோ வா கதர்ய: குத்ஸிதோऽபி வா ॥
காதர: கிதவோ வாபி லலநாலம்படோऽபி வா ।
ஸததம் தேவவத்பூஜ்ய: ஸாத்வ்யா வாக்காயகர்மபி: ॥
அஹங்காரம் விஹாயாத காமக்ரோதௌ ச ஸர்வதா ।
மநஸோ ரஞ்ஜநம் பத்யு: கார்யமந்யஸ்ய வர்ஜநம் ॥ வ்யாஸ: ॥

ஒரு ஸ்திரீயின் பதியானவன் பார்வைக்கு விகாரமான ரூபத்துட னிருந்தாலும் கெட்ட நடத்தையையுடையவனாயிருப்பினும் என்ன கெடுதலுடன் கூடியவனாயிருப்பினும் ரோகியாயிருந்தாலும் பூதாவேசம் கொண்டவனாயிருந்தாலும், மதுபானத்தில் விருப்ப முள்ளவனாயிருப்பினும், அதிக கோபம் கொண்டிருந்தாலும், கிழவனாயிருந்தாலும், ஸமர்த்தனாயிருந்தாலும், ஊமையாயும் குருடாயும், செவிடாயுமிருந்தாலும், பயங்கரனாகவும் தரித்திரனா கவும், கிருபணனாகவும், நிந்தியனாகவும், பயந்தவனாகவும், பரஸ் திரீ விருப்பமுள்ளவனாகவும் இருந்தபோதிலும் 'உத்தமகுணமு டைய பதிவிரதாஸ்திரீயானவள் காமக்குரோதம் முதலியகெட்ட குணங்களைவிட்டுத்தன்பதியை தேவதையாகப்பாவித்துப் பூஜிக்க வேண்டும் இதரகார்யங்களைப் பூராவும்விட்டுவிட்டு பதியினுடைய மனத்திற்குத் திருப்தியாய் நடக்கவேண்டும் என்று வியாஸமஹ ரிஷி கூறுகின்றார்.

दरिद्रं व्याधितं मूर्खं भर्तारं यावमन्यते ।
सा शुनी जायते मृत्वा सूकरी च पुनःपुनः ॥ पराशरः ।

தரித்ரம் வ்யாதிதம் மூர்க்கம் பர்த்தாரம் யாவமந்யதே ।
ஸாஶுநீஜாயதே ம்ருத்வா ஸூகரீ ச புந:புந: பராஶர:।

எந்தஸ்திரீயானவள் தன்புருஷனை தரித்திரன் வியாதியுள்ளவன் மூர்க்கன் முதலான காரணங்களைக்கொண்டு அவமானம் செய்கி ருளோ அந்தஸ்திரீயானவள் மரணத்தையடைந்தபிறகு நாயாகப் பிறக்கிருள். பிறகு அடிக்கடி பெண்பன்றியாக ஜனிக்கிருள் என்று பராசரர் கருதுகின்றார். இதே அபிப்பிராயத்தை தக்ஷரும் வெளியிட்டிருக்கிறார்.

अशीलः कामवृत्तो वा गुणैर्वा परिवर्जितः ।
न स्त्र्याः परिवर्ज्यस्स्यात् सततं दैववत्पतिः ॥ मनुः ।

அஶீல: காமவ்ருத்தோ வா குணைர்வா பரிவர்ஜித: ।
நஸ்த்ர்யா:பரிவர்ஜ்யஸ்ஸ்யாத் ஸததம் தைவவத்பதி: । மநு:।

ஸ்திரீயானவள் தன்புருஷன் ஆசாரமில்லாதவனாயிருப்பினும்இஷ் டப்படி காரியங்களைச்செய்கிறவனாயிருந்தபோதிலும் சிறந்தகுண

ங்களற்றவனாயிருப்பினும் அவனைவிடாமல் தைவத்தைப்போல் பாவித்து ஆராதிக்கவேண்டும் என்று மனுசொல்லியிருக்கிறார்.

आहूता या तु वै भर्त्रा स्त्री न याति त्वरान्विता ।
सा ध्वांक्षी जायते नूनं दश जन्मानि पञ्च च ॥ व्यासः ॥

ஆஹூதா யா து வை பர்த்ரா ஸ்த்ரீ ந யாதி த்வராந்விதா ।
ஸா த்வாங்க்ஷீ ஜாயதே நூநம் தசஜந்மாநி பஞ்ச ச ॥ வ்யாஸ: ॥

எந்தஸ்திரீயானவள் தன்பர்த்தாவினால் அழைக்கப்பட்டவுடன் வேகமாக அவன் அருகில் போகவில்லையோ அவள் 15 ஜன்மங்கள் பெண் காகமாக ஜநிக்கிறாள் ஸந்தேகமேயில்லை என்றும்:—

कामाद्रोषात्मत्सराद्वा भर्तारं यावमन्यते ।
सा सप्तजन्मकं यावत् नारकी स्यान्न संशयः ॥ व्यासः ॥

காமாத்ரோஷாத்மத்ஸராத்வா பர்த்தாரம் யாவமந்யதே ।
ஸா ஸப்தஜந்மகம் யாவத் நாரகீ ஸ்யாந்ந ஸம்சய: ॥ வ்யாஸ: ॥

எவள் காமத்தினாலோ, கோபத்தினாலோ, விரோதத்தினாலோ, தன்பதியை அவமானம் செய்கின்றாளோ, அந்தஸ்திரீ, ஏழுஜன்மம் பூராவும் அவசியம்நரகதுக்கத்தை அநுபவிக்கிறாள் என்பதும் வியாஸர் வெளியிட்டிருக்கிறார்

पाणिग्राहस्य साध्वी स्त्री जीवतो वा मृतस्य वा ।
पतिलोकमभीप्सन्ति नाचरेत्किञ्चिदप्रियम् ॥

பாணிக்ராஹஸ்ய ஸாத்வீ ஸ்த்ரீ ஜீவதோ வா ம்ருதஸ்ய வா ।
பதிலோகமபீப்ஸந்தி நாசரேத்கிஞ்சிதப்ரியம் ॥

சிறந்தகுணமுடைய நாரியானவள் தன்னைமணம்புரிந்த பதிஜீவித்திருந்தாலும் அல்லது மரித்தாலும் பதிலோகத்தையடையவேண்டுமென்கிற விருப்பமிருப்பின் அற்பங்கூட பர்த்தாவுக்குப் பிரியமில்லாத காரியத்தைச்செய்யக்கூடாது. மனு.

(தொடரும்)

உபபத்திராதிபர்.

2-ம்பாகம்.

அரசாங்கம்.

(கஉஎ-வது பக்கத் தொடர்ச்சி)

பிராம்மணருக்கு, நிஷேகம் முதலான நாற்பது ஸம்ஸ்காரங்களும், தயை, பொறுமை அசூயை இல்லாமை, சுத்தி, அனுபாசம், அகார்ப்பண்யம், ஆசை யில்லாமை என்ற எட்டு ஆத்ம குணங்களும் அவசியம் என்று கூறப்பட்டிருக்கிறது. மற்றவர்களுக்கும் சில ஸம்ஸ்காரங்கள் குறைத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. சுருக்கமாய்ச் சொல்லுமிடத்து யாவரும் அவரவர்களுக்கு விதித்தபடி தர்மங்களை நடத்தி, ராஜவிசுவாசிகளாயிருந்து பகவானிடத்தில் பக்திசெய்து வரவேண்டும். அப்படிச்செய்தால் தான் இம்மானிடப் பிறவியைப் பெற்றதற்கு ஸாபல்யம் ஏற்படும். ஜீவன் சரீரத்தை விட்டுப்பிரியும்போது, செல்வம், உறவினர் முதலானவை துணைபுரியா. அவரவர் செய்த தர்மம் ஒன்றே பின்தொடர்ந்து தலைகாக்கும். ஆகையால் வர்ணாசிரமப்படிபழைய வழக்கங்களைத் திடப்படுத்திக்கொள்ளுங்கள் என்று உபதேசித்து மௌனம் சாதித்தனர். அம்மஹாராஜனும் சபையோருடன் அம்மஹான்களைக் கொண்டாடி, இப்போது தான் நாங்கள் பிறவிப்பயனை நன்குணர்ந்தோம். பாக்யத்தைப் பெற்றோம். அடிக்கடி இங்ஙனம் தர்மோபதேசம் செய்து எங்களைக் காத்தல்வேண்டும் என்று வணங்கி, உபசரித்தனர். அம்முனிவர்களும் அநுமதிபெற்றுத் தங்கள் தங்களில்லஞ் சென்றார்கள்.

குடிகளின் வேண்டுகோள்.

இவ்விதம் வைன்ய மகாராஜர் அரசு செலுத்தும்போது, பூமியில் தானியம் முதலான பல வர்க்கங்கள் நன்கு விளையாது குடிகளுக்குப் பசிப்பிணி மேலிட்டுச் சங்கடங்கள் ஏற்படத் தொடங்கின. வஸுந்தரை என்ற பெயர் பூமிக்கு, பொருள் பெறாத ரூடிப்பெயராகவே இருந்தது. அப்போது அக்குடிகள் மரீசி முதலான முனிவரிடம் விக்ஞாபனஞ்செய்ய அவர்கள் கண்மூடித்

தியானித்துச் சொல்லத் தொடங்கினர். ஓ, பிரஜைகளே கேளுங்கள்! புருஷார்த்தம் சித்திப்பதற்கு, அக்நிஹோத்திராதி கர்மாக்களையும், அதற்குச் சாதனமாக ஔஷதிகளையும் பிரும்மதேவர் உண்டாக்கியிருக்கிறார். வேனன் அரசுபுரியும்போது அவ்விதமான காரியத்தில் பயன்படுத்தாமல், சரீரபோஷணத்தையே ஜனங்கள் கைக்கொண்டபோது, அத்தான்யங்களின் பீஜங்களைப் பூமி விழுங்கிவிட்டாள். யாகங்களால், யக்ஞ புருஷனையாராதித்தால் பூமி, ஸ்வர்க்கம் என்ற இரண்டு லோகங்களுக்கும் சுபிக்ஷம் உண்டாகும். இப்போது ஆளும் பிருதுமகாராஜன் விஷ்ணுவின் அம்சத்தால் அவதரித்தவர் ஆதலால், அவரிடம் தெரிவித்தால் இஷ்டசித்தி கிடைக்கும் என்று மறு மொழி கூறினர்.

பூமியின் சரணம்.

அவர்களும் அவ்வாறே, பிருதுமஹாராஜரிடம் தெரிவிக்க அவரும்கோபங்கொண்டு, வில்லையும், அம்புகளையும் எடுத்துக் கொண்டு வசுமதியுடன் போருக்குச் சன்னத்தரானார். அப்போது அதைத்தெரிந்த பூமிதேவியானவள், பயந்து நடுநடுங்கி, கோரூபம்பூண்டு ஓடத்தொடங்கினாள். அம்மஹாராஜனும் பிரும்மலோகம்வரை பின்தொடரவே பூதேவியானவள் பிரமித்தாள் எங்குப் பார்த்தாலும், தேவர்களாலும் எதிர்க்கத்தகாதவரும், கூர்மையான அம்புகளை வில்லில்எய்துகொண்டு, ஜ்வலிப்பவருமானபிருது மஹாராஜரே முன்தோன்றினார். முடிவில் அவரையே சரணமடைந்து, கைக்கூப்பிநின்று, சொல்லத்தொடங்கினாள். நாதனே! "தாங்கள் அபலையைக் கொல்லத்துணிவது தகுதியல்ல" "நானின்று குடிகளைத் தரிக்கத்தங்களால் எங்ஙனம்கூடும்" எவ்வுலகங்களும் என்னிடத்திலேயே நிலைபெற்றிருக்கின்றன.' ஆகையால் எனக்கு அழிவு நேருங்கால் யாவருக்குமே அழிவு சம்பவிக்கும் குடிகளின்க்ஷேமத்தைத் தாங்கள் உண்மையாய்க் கருதினால் என்னைக்கொல்வது தகாது. சற்று ஒருவார்த்தை கவனிக்கவேண்டும். "உபாயத்தாலேயேதான் எவ்விதமான காரியமும் கைகூடும்.' சினத்தை அடக்கவேண்டும். 'அபலையைக் கடிந்துகொள்வது தர்மமாகாது' தர்மமார்க்கத்தைக் கெடுக்கலாகாது என்று தெரிவித்துக்கொண்டாள்.

ராஜன்பதில்.

அவ்வார்த்தையைக்கேட்ட பெருமனதுள்ள மஹாராஜன் கோபத்தை அடக்கி, பூமியைப்பார்த்துப் பின்வருமாறு சொல்லலானுன். "ஒருவருக்காக அனேகரைவதைப்பது மஹாபாதகமாகும். அனேகருக்காக ஒருவரைவதைப்பது அவ்விதமாகாது." நானும் குடிகளுக்காக துஷ்டையான உன்னை வதைப்பேன். உலகத்தின் நன்மைக்காக எனதுமொழியைச் செவியுற்று தான்யம் முதலான ஆகாரவர்க்கத்தால் குடிகளை ரக்ஷித்தல்வேண்டும். இல்லாவிடில் கூர்மையான இதேஅம்பால் உன்னைக்கொன்று யோகசித்தியால் எனதுசரீரத்தை விரிவாகச்செய்து குடிகளைக்காப்பேன். மேலும்நீ எனக்குப்புதல்வியாகவேண்டும். அப்படியாயின் இந்த அம்பைத்தணிப்பேன் என்று மொழிந்தான்.

பூமியைச்சமமாக்கல்,

அப்போது பூதேவியானவள் சிறிது தைரியம் அடைந்து வீரனே! அப்படியே செய்கிறேன். ஆனால் கோரூபியான என்னைக்கரக்கத் தாங்கள் கன்றுகளை தேடித்தரவேண்டும். மலைகளால் மேடான என்னைச்சமமாக்கவேண்டும்அப்போதுதான்எனதுபால் பெருகி எங்கும் பரவும்என்று சொன்னாள். உடனேவைன்யன்வில்லின்முனையால்மலைகளை ஒன்றன்மேல்ஒன்றாகத்தள்ளிபூமியைச்சமமாக்கினுன். இதற்குமுந்தின மன்வந்தரங்களில் பூமி சமமில்லாமல் இருந்தது. இந்தமன்வந்திரத்திலும் வைன்யன் முதற்கொண்டுதான், பயிரிடுவது, பசுஸம்ரக்ஷணம், உழுவது, வியாபாரத்திற்குரியமார்க்கம், வியாபாரம் பட்டணம் கிராமம்முதலான ஸௌகரியங்கள் ஏற்படலாயின. எங்கெங்கே பூமி சமமாக்கப்பட்டதோ அங்கங்கே பிரஜைகள்விடுதிகளைபமைத்துக்கொண்டு,பழம்கிழங்கு முதலான அன்னவர்க்கத்தையடைய ஸௌகர்யம் அடைந்தனர்.

கோவைக்கறப்பது.

பிறகு, பிரதாபசாலியான பிருது மஹாராஜர் ஸ்வாயம்புமனுவைக் கன்றாக்கித் தன்புயத்தில் கோரூபியான பூமியிலிருந்து ஸகலதான்யங்களையும் கறந்தார் இப்போதும் யாவரும் அத்தான்யவர்க்கங்களாலாகிய அன்னத்தாலேயே ஜீவிக்கிறார்கள்.

அதன்பிறகு அநேகர், பிருதுகறந்ததுபோல் தங்கள்தங்களுக்கு வேண்டியவைகளைக் கறந்துகொண்டனர். சூரியபகவான்

இந்திரனைக்கன்றுக்கி, ஸ்வர்ணபாத்திரத்தில் தேவர்களுக்காக, அமிருதமாகிற பாலைக்கறந்தார். ஆகையால்தான் அவர்கள் அமிருதாசனர்கள் என வழங்கப்படுகின்றனர்.

ஐராவதம் என்ற ஸர்ப்பம் தக்ஷகனைக் கன்றுக்கி, சொரைக்காயாலான பாத்திரத்தில் விஷமாகிற பாலைக் கறந்தது. ஆகையால்தான் ஸர்ப்பங்கள், விஷத்தையாகாரமாகக் கொண்டு உக்ரங்களாயும் விஷத்தை வீரியமாக உடையவைகளாயுமிருக்கின்றன. தானவர்கள் ப்ரஹ்லாதனைக் கன்றுக்கி இருப்புப் பாத்திரத்தில் சத்துரு ஸம்ஹாரஞ் செய்யும் மாயையைக் கறந்தனர். இப்போதும் அவர்கள் மாயாவிகளாய், அதனாலேயெ ஜீவிக்கின்றனர்.

ரஜதநாபன் குபேரனைக் கன்றுக்கிப் பச்சைப் பாத்திரத்தில் அக்ஷயமான அந்தர்த்தானத்தைக் கறந்தார். ஆகையால்தான் யக்ஷகர்கள் பரசரீரத்தில் பிரவேசித்து பிரத்யக்ஷமில்லாமல் ஜீவிக்கிறார்கள்.

ரஜதநாபன் சுமாலியைக் கன்றுக்கி பிணத்தின் கபாலமேந்தி உதிரத்தைக் கறந்தான். அதனால், யக்ஷர்களும், ராக்ஷஸர்களும், பிசாசங்களும், பூதங்களும் அதனாலே ஜீவிககின்றனர்.

மேருவானர் ஹிமாசலத்தைக் கன்றுக்கி, ஔஷதிகளையும் இரத்தினங்களையும் கறந்தார்.

இப்படிமற்றும் அனேகர் தத்தமக்குரியவைகளைக் கறந்து கொண்டனர்.

ஆகையால்தான் பூமிதேவிக்கு வடமொழியில் ப்ருத்வீ என்றும் பிருதிவீ என்றும் பெயர் வழங்கலாயிற்று. பூமியானவள் தேவதாஸ்வரூபியாதலால், பூமி ரூபத்தைத் தவிர ஒரு அம்சத்தால் புதல்வியாயும் மற்றொரு அம்சத்தால் பாரியையாயுமானாள். ஆகையால் தான் பூபதி என்ற பெயரும் ஆதிராஜருக்குத் தகும். பிறகு குடிகளும் பிருது சக்காவர்த்தியைக் கொண்டாடி அவரால் ஏற்படுத்தப்பட்ட நகரம், கிராமம், சேரி முதலான வசதிகளையடைந்து, உழாமலே விளையத் தொடங்கின. பூமியிலிருந்து கிடைத்த தான்யவர்க்கங்களைப் பெற்று, யாகம் முதலான ஸத்கர்மாக்களை விதிப்படி செய்து சுகித்து ஜீவித்து வந்தனர்.

இரண்டாவது பாகம் முற்றிற்று.

K. V. சுப்பிரமண்ய சாஸ்திரி. மதுரை.

ஆன்ஹிகக்ரமம்.

(ககக-வது பக்கத்தொடர்ச்சி)

பஞ்சுநூல் துணியானல் நேற்று தோய்த்ததை இன்று உபயோகிக்கலாம். பித்ருச்ராத்தமானல் அன்றன்று தோய்த்ததே மடியாகும். பிறர்துணி பாதுகை இவைகளை உபயோகிக்கக் கூடாது. மடி உடுத்திக்கொண்டபிறகு

புண்ட்ரதாரணம்.

செய்து கொள்ளவேண்டும். புண்ட்ரமில்லாமல் செய்த கர்மாசாம்பலில் செய்த ஆஹுதி போலாகும். பொதுவாக முக த்திற்குத் திலக மணிவது ஓர் அழகைக் கொடுக்கும். ஸ்நாநம் செய்தவுடன் கீபாலத்தில் ஏறின நீரை விபூதியோ திருமண்ணோ இழுக்க வல்லமையுள்ளது. அன்றியும் எல்லா மதத்தினரும பொதுவாக நெற்றியை முக்யமாகவும் மற்ற பதினோரிடங்களை அங்கங்களாகவும் அமைத்திருக்ன்றனர். அந்த நெற்றியில்வே தாந்திகள் யோகிகள் கர்மிகள் முதலிய எல்லோரும் அவ்விட த்தைக் கொண்டாடுகின்றனர். அங்கத்தில் உத்தமாங்கம் தலை யாம். மூளையும் நாலு இந்த்ரியங்களும் அங்கே அமைந்துள. இருபுருவங்களுக்கிடையில் ஈசன் தங்குமிடமுளது. ஆதலால் அங்கே திலகமணிவது ஆண்டவனை அர்ச்சிப்பதாகும். ஆசௌசம் வந்தால்தான் இவைகளை யணியக்கூடாது. மற்ற காலங்களில் ஒவ்வொருவனும் தம்மதத்திற்கும் குலாசாரத்திற்கும் தக்கபடி அவசியம் புண்ட்ரமணிய வேண்டும்.

அது த்ரிபுண்ட்ரம் ஊர்த்வபுண்ட்ரம் என இரு வகைப்படும். குறுக்கில் மூன்று விரல்களால் விபூதியும் சந்தநமுமணிவது த்ரி புண்ட்ரமாம். நேரே கோபீ சந்தநமோ திருமண்ணோ இடுவது ஊர்த்வபுண்ட்ரமாகும். ஸந்தியைச் செய்யும்போது ஜலத்தாலும் ஜபகாலத்தில் கோபியோ விபூதியோ தரிக்கவேண்டும். பூஜா காலத்தில் மத்யான்ஹத்தில் சந்தநமணிய வேண்டும் ஒரு புண்ட்ரத்தின்மேல் மற்றோர் புண்ட்ரம் அணியக்கூடாது. ஆனல் கோபீ சந்தநத்தின்மேல் கட்டாயம் விபூதி தூளநம் செய்துக் கொள்ளவேண்டும். ஊர்த்வ புண்டரம். "விஷ்ணோர்" என்ற

மந்திரத்தால் குழைத்துக் கேசவாதி பனிரண்டு நாமங்களைக் கூறி மோதிரவிரலால் இட்டுக்கொள்ளவேண்டும். நெற்றியில் கேசவ வயிற்றில் நாராயண, மார்பில் மாதவ, கழுத்தில் கோவிந்த, வலது பக்கவயிற்றில்விஷ்ணு, வலது கையில் மதுசூதந,வலதுகழுதகில் த்ரிவிகரம, இடது வயிற்றில் வாமந இடது கையில் ஸ்ரீதா இடது கழுத்தில் ஹ்ருஷீகேச பிருஷ்டத்தில் பத்மநாப பிடரியில்தாமோதர என்றும் கூறித் தரிக்கவேண்டும். ஆசாரபேதமுண்டு கங்கா தீரத்திலுண்டான ம்ருத்தே சிலாக்யமானது. பசுமை நிறமானது சாந்தியையும் ரக்தவர்ணம் வசீகாத்தையும் கொஞ்ச வெண்மை லக்ஷ்மியையும் சுத்த வெண்மை விஷ்ணு பக்தியையுமளிக்கும். கட்டவிரலாலிட்டால் புஷ்டியும், மத்யம் ஆயுஸ்ஸையும், மோதர விரல் அன்னத்தையும், அளிக்கும். பிராமணர்கள் நடுவில் சந்தில்லாமல் நேராகவும், க்ஷத்திரியர் அர்த்தசந்திராகாரமாகவும் வைச்யர் வர்த்துளமாகவும் இடவேண்டும். நகத்தினால் இடக்கூடாது. இதாமதத்தினர்கூட நெற்றிப் புருவத்திற் கிடையிலுள்ள ஸ்தானத்தை அறிந்தோ அறியாமலோ பிறரை வணங்கும்போது அவ்விடத்தைக் குறிக்கின்றனர்.

த்ரிபுண்ட்ரம் விதிப்படியே கபிலையின் கோமயத்தால் விரஜாஹோம புரஸ்ஸரமாக ஸம்ஸ்கரிக்கப்பட்டதேவிபூதியாகும். அது கிடைக்காவிடில் அக்னிஹோத்ர பஸ்ம சிலாக்யமாகும். அதுவுங் கிடைக்காவிடில் தான்செய்த ஔபாஸந பஸ்மாவை எடுத்துக் கொள்ளலாம். அதை தரிக்கும்போது ஒரு கணங்கூட சிந்தக்கூடாது. அண்ணார்ந்து நெற்றிக் கணிந்தால் கீழே சிந்துவதெல்லாம் அங்கத்திலேயே விழும். முதலில் தூளநம் செய்துக் கொண்டு "ஸத்யோ" என்றமந்திரத்தால் எடுத்து "மாநஸ்தோகே", என்றதால் ஜலத்தைச் சேர்த்து "அக்நிரிதி" என்ற மந்திரத்தால் தலை,நெற்றி,மார்பு,வயிர்,கைகள், ப்ருஷ்டம் இவைகளில் தரித்துக் கொள்ளவெண்டும். விபூதியிட்ட கையைக் கழுவிக் கீழே விடக்கூடாது. அதைக் குடித்துவிடவேண்டும். வீரசைவர்கள் உடல் ஆத்யந்தம் பூசிக்கொள்வர். மோதிரவிரல் அடுத்த பெருவிரல் கட்டைவிரல் இவைகளால் தான் இட்டுக்கொள்ள வேண்டும். மூன்றுரேகைகள் அகார உகார மகாரங்கள்பிரும்மவிஷ்ணுருத்ரன் ருக்யஜுஸ்ஸாம என்று தியாநம்செய்யவேண்டும். இப்படிப்பட்ட விபூதியைக்கண்டு பேய்பிசாசுகள் பறக்குமாம், அதே பாவநமா

னது. மந்திரத்துடன் சேர்ந்துவிடின் அதன் பெருமைக்கு அள வேது. எந்த மாந்திரிகர்களும் விபூதியையே பெரும்பாலும் மந்திரிக்கின்றனர். வெண்மை நிறம் ஸத்வகுணமாகும். தமோ குணமூர்த்தி ருத்ரன் என்றாலும் அதைக்காய்ச்சினால் அது சுத்த ஸத்வமான பூதியாய் விடுகிறது. இவ்வுண்மையே புராணங்க ளில் ஸம்ஹார மூர்த்தி எனப்போதிக்கப்படுகிறது. அந்த விபூதி யின் மேல் வேறெதையும் இடக்கூடாது. அதை வேண்டுமென அழிக்கவுங் கூடாது. அஸ்தமனத்திற்குப் பிறகு (ஜலமில்லாமல்) தூளனமே செய்துக்கொள்ளவேண்டும். சிரார்த்த காலத்தில் எந்தப்புண்ட்ரமும்கோலம் மணிச்சப்தம் நெய்விட்ட தூபம் மண் பாத்ர அர்க்யம் வங்கல இரும்புப் பாத்ரத்தில் வைத்தஹவிஸ் இவைகளைக்கண்டு பித்ருக்கள் நிராசையாக ஓடி விடுகின்றனர். சில வீரசைவர்களும் வைணவர்களும் நெற்றிக்கிட்டு அவரவர் ஸ்வாமியை பூஜித்தபிறகே பித்ருகார்யம் செய்வது வழக்கம்.

† ஸந்தயா.

இதுவரைக் கூறியன இதன் வெளியங்கங்களாகும். ஸ்நா நம், வஸ்திரம், புண்ட்ரம் இவைகளில்லாமல் செய்யும் ஸந்தியை நிஷ்பலமாகும். பகல் இரவு இவ்விரண்டின் சேர்க்கையே ப்ராத ஸ்ஸந்தியாஸாயம் ஸந்தியா என்று கூறப்படுகிறது. அக்காலத் தில் உபாஸிக்கப்படும் தேவதைகளும் கர்மாவிற்கும்கூட ஸந்தியா என்ற பெயர் பொருந்தும். காலத்தைக் குறித்தே இதற்குப் பெயரிடப்பட்டிருப்பதால் காலம் அத்யவசியமெனக்காண்கிறது. காலையிலே ; நக்ஷத்ரமிருக்கும்போதே அநுஷ்டிப்பது உத்தமம். அது மறைந்தபொழுது மத்யமம், மற்றது அதமமாகும். அகா லத்தில் செய்வது சாம்பலில் செய்யப்படும் ஆகுதிக்கொப்பாகும், ப்ரும்மாதி தேவர்களும் இதைத் தவராமல் அநுஷ்டிக்கின்றனர் மூன்று நாள் சேர்ந்து இதை விட்டவன் பிராமண்யத்தை இழப் பதோடு நாயாகவும் பிறக்கிறான். ராக்ஷஸர்கள் தவம் செய்து வரம் பெற்றனர். அதனால் ப்ரதிதினமும் ஸூர்யன் உதயமாகும் போது அவரை எதிர்க்கின்றனர். த்விஜர்கள் விதிப்படி கொடுக்

---

† இதைப்பற்றி நித்யோபாஸநம் என்ற அடியேன் உபன்யாஸம் அச்சிலிருக்கிறது. விலை அணா 0—2—0

180

கும் அர்க்யம் வஜ்ரமாகச் சென்று அவ்வரக்கர்களை மந்தேஹாருணம் என்ற த்வீபத்தில் எரிகின்றது. அந்த தோஷ நிவர்த்திக்காக உடனே ப்ரதக்ஷிணம் செய்யவேண்டும் என வேத விதி கூறுகிறது. இதே முக்ய கர்மா. அதற்குப்பூர்வாங்கமாகவும் உத்திராங்கமாகவும் சிலவைசொல்லப்பட்டிருக்கின்றன. ஸந்தியைக்கும் ஜபத்திற்கும் காயத்ரியே ப்ரதானமாகும். தன்னை ஜபிப்பவனைக் காப்பாற்றுவதால் அதற்கு காயத்ரி எனக் காரணப்பெயர். அது காலையில் காயத்ரீ மத்யான்ஹத்தில் ஸாவித்ரீ, ஸாயம் ஸரஸ்வதி எனவும் உபாஸிக்கப்படவேண்டும். பிரும்ம, சிவன், விஷ்ணு, எனவும் முறையே நினைக்கவேண்டும். மூன்று வேதஸ்வரூபமென்றும் தியானித்தல் அவசியம்.

மார்ஜனம்.

இரண்டு ஆசமனங்கள்செய்து அந்தந்தக் காலத்தைக்குறிப்பிட்டு ப்ராணாயாம புறஸ்ஸரமாக ஸங்கல்பம் செய்துகொள்ளவேண்டும். ப்ரணவத்தைஜலத்திலெழுதி அதைஸ்ரீகேசவாயநமஹ என்று நெற்றிக்கிட்டுக்கொண்டு மார்ஜனம் செய்துகொள்ளவேண்டும் வைதிகமந்திரம் ஒவ்வொன்றிற்கும் (அதனைக்கண்டு பயன்பெற்ற) ரிஷி சந்தஸ் தேவதைகளைக் கூறவேண்டும். இம்மார்ஜநமந்திரத்திற்கு அவைகளைக்கூறும் வழக்கம் சிஷ்டாசாரத்திலில்லை. இம்மந்திரங்களை நிறுத்தி ஸ்வரத்துடன் கூறி மந்திரமுடிவில் தலையில் ப்ரோக்ஷித்துக்கொள்ளவேண்டும். கடைசி மந்திரத்திற்கு முன்மந்திரத்தால் கால்களைப்ரோக்ஷிக்கவேண்டும். ப்ரோக்ஷண ஸமயத்தில் இடதுகையால் ஜலத்தை (தடாகாதிகளில்) தொட்டுக்கொண்டிருக்கவேண்டும். ஜலதேவதையைத் தீமையயகற்றி நன்மையைக் கொடுக்கும்படி வேண்டுகிறோம். அதன் மூலமாகத்தேஹத்திலுள்ளமேல்மலங்கள் கழிகின்றன. உள்மலங்கழிய அக்னி மன்யு சூர்யன் ஜலம்முதலியவர்களை ஸகலகாரணங்களாலும் செய்தபாபத்தையகற்றும்படி பிரார்த்தித்து உள்ளே ஜலத்தைக்குடிக்கவேண்டும். மறுபடியும் உள்பாபம் வெளியில் செல்லும்போது கொஞ்சம் அங்கும் தங்கலாமென யோசித்து "ததிக்ராவா" என்ற தேவருடன் ஜலதேவதைகளையும் பிரார்த்தித்து அதையும் நீக்கவேண்டும். மறுபடியும் கரத்தில் ஜலமேந்தி "த்ருபதாத்" என்றதை ஜபித்து முகர்ந்துவிடுவது சிலர்வழக்கம். பாபத்தையகற்றுவதே அதன்பயனும். ஜலதேவதையே வேண்டப்படுகிறது. (தொடரும்) வே. ஸோமதேவசர்மா

பழைய மாணவர்சங்கம் ஸம்ஸ்கிருத காலேஜ் திருவையாறு.

திருவாதி வடமொழி கல்லூரி பழய மாணவர் சங்கத்தினாதரவில் (19—2—1927) சனிக்கிழமை மாலை 4 மணிக்கு ஷை சங்கத்தின் பிரஸிடெண்டும் ஷை கல்லூரியின் மீமாம்ஸை தலைமை ஆசாரியராயுமுள்ள ஸ்ரீமான் D.T. தாதாசாரியாரவர்களால் 'கிரந்த பரிசிலனம்" என்ற விஷயத்தைப் பற்பல மேற்கோட்பாட்டுடன் இனிய தமிழ் நடையில் பண்டித பாமர ரஞ்சகமாக உபன்யஸிக்கப்பட்டது.

அதன் ஸாராம்சமாவது

ஓர் கல்லூரியில்ப்படித்து தேற்சியடைந்து தகுந்தஇடத்தில் ஓர் ஆசாரியர் ஸ்தானத்தையடையநேரிடின் அதையே ஓர் புருஷார்த்தமெனப் பாவிக்காது. வருடமொருதடவையாவது தான் பயின்ற இடங்களில் ஓர் சங்கத்தை ஏற்படுத்திப் பழயமாணவர்களனைவரும் அவ்வமயம் ஒன்று கூட்டி ஒற்றுமையை வளர்த்தல் ஓர் முக்யப் பிரயோஜனமாகும்.

உலகில் பற்பல கலைகளிருப்பதால் தான் கற்ற கலையுடன் நில்லாது முன் தான் பயின்றதைத் துணையாகக் கொண்டு மேன் மேலும் பயில முயலவேண்டும். அதன் மூலம் பண்டிதர்களுள் ஒற்றுமை வளரக் காரணமாகும். மேலும் தான் கற்ற நூல்களில் மிகப்பாடுபட்டு நுண்ணிய அருமையான விஷயங்களைக் கடைந்தெடுத்து உலகில்யாவருக்கும் பயன்படுமாறு இனியநடையில் காவ்ய ரூபமாக் வரைவது. இவ்விஷயத்தில் ஒருவரே பாடுபடுவதைவிட பலர் ஒன்று கூடிப் பிரயாசைப்படின் வெகு ரகஸ்யங்களை (தத்வங்களை) நாமறிந்தவர்களாவோம். இதையொட்டியே மேல்நாட்டார் தங்கள் ஒரு விஷயத்தை ஆராய்ச்சி செய்து, அவைகளைக் கிரந்த ரூபமாக வெளியிடுவதிலேயே காலத்தைக் கழித்து ஒப்பில்லாத ஆனந்தத்தையும் கீர்த்தியையும் அடைகின்றார்கள். நம்மவர்களில் அம்மாதிரி துரையில் இரங்குபவர்கள் வெகு சிலரே. அவர்களை யேதும் ஆதரிப்பவர்கள் உல

இல் உளரோ? இல்லை! இல்லை! ஆகவே நம் புராதனக்கல்வி சீர் கேட்டை அடைகின்றது இது விஷயத்தில் ஓர் கவிக்கும் மற்றொருவருக்கும் நடந்த சம்பாஷணையே நமக்குப்போதுமான சான்றாகும். அதாவது, நீர் யாரென்று ஓர் கவியை நோக்கி மற்றொருவர் வினவ அதற்குக் கவி நான் காவ்யம் இயற்றும் கவி யாவர். ஆனால் அத்தொழிலைத் தற்காலம் விட்டுவிட்டேன் என்றார். அதற்குக் காரணம் யாதெனெ மறுபடி வினவ அதற்குக் கவி நான் இயற்றிய கிரந்தங்களை கேட்பவர் உலகில் யாவரும் இலர் அப்படி ஒரு சமயம் ஒருவரேனும் கேட்க நேரிடில் அதிலுள்ள குணத்தை வெளிப்படுத்தாது தோஷத்தையே பழிசாற்றுகிறார்கள். இதனாலேயே இத்தொழிலையடியோடொழித்தேன் என்றாராம். மேலும் அக்காவ்யங்களின் கர்த்தா உயிரோடிருப்பாராயின் அதுவே தோஷமெனக்கருதப்படுவதென ஓர் வித்வான் அபிப்ராயப்படுகிறார். இவ்விஷயங்களில் பண்டிதர்கள் ஒருவருக்கொருவர்வித்யாசப்படாது ஒவ்வொருவர் செய்யும் கார்யத்தையும் நமது கடமை எனப்பாவித்துச் சகோதரப் பான்மையை வளர்க்கவழி தேடவேண்டும் இவ்விஷயத்தையேவாசஸ்பதிமிச்ரர் स्वार्थेषु को मत्सर: ஸ்வார்த்தேஷு கோ மத்ஸர: என்றுறைத்துள்ளார். நமதுவேதங்களில் ज्योतिष्टोम: ஜ்யோதிஷ்டோம: என்று ஒருயாகம் அதில் ஒருயஜமானனும் மற்ற 16 ரிதவிக்குகள் ஆக 17 நபர்கள் அந்த யாகத்திற்கு அங்கத்தினர்கள் அவர்கள் ஆனால் யஜமானர் 16ரித்விக்குகளுக்குத்தக்கவாறு திரவ்யஸகாயம்செய்து அவர்கள் செய்யும் கார்யங்களில் பலனை தானே அடைகிறான் என்றும் ருத்விக்குகளும்த்ருஷ்டப் பிரயோஜனம்தானென்றும் இதை ஒவ்வொருவருமனுஷ்டிக்கவேண்டுமென்றும் सत्र ஸத்ர யாகத்தில் 17முதல் 24 நபர்கள் வரை உண்டென்றும் ஆனால் அதனாலுண்டாகிற பலன்கள் எல்லோரையும் சேர்ந்ததென்றும் எனவே ஒவ்வொருவரும் தனித்தனியாகக் கர்மாக்களைப்பகுத்துச்சரிவர நடத்துவதுடன் ஒத்துழைத்தல் வேண்டுமெனக்கூறப்படுகிறது. ஆகையால்பண்டிதர்கள் ஒவ்வொருவரும் இரண்டாவதாகக் கூறப்பட்டுள்ளஸத்ரயாகத்தை அனுஷ்டிப்பவர்கள் போல ஆராய்ச்சிமுறையில் ஒற்றுமைப்பட்டு பற்பல விஷயங்களை வெளிப்படுத்துவதே மெச்சத்தக்கதாகும். மேலும் இம்மாதிரி துறைகளில்சற்றுஇரங்கு

வோமாஞல் பிறகு நமது ஊக்கம் குன்றினாலும் நம்மை விடாது. எடுத்த கார்யத்தை முடிக்குமாறு அவ்விஷயம் நம்மைத் தூண்டி விடும்.

ஆராய்ச்சிமுறை இருவகைப்படும். (1) நூல்களை நன்று பயின்று அதனால் கிடைக்கும் நுண்ணிய விஷயங்களை ஆராய்வது (2) அதன்மூலம் அக்காவ்யத்தின் கர்த்தாவின் புத்தியை ஆராய்வது. இவ்விருமுறைகளையும்ஒன்றெனச்சிலர் கருதுகிறார்கள். இவ்விருமுறைகளும் நமது முன்னோர்களின் கிரந்தங்களில் ததும்பிக் கிடக்கின்றன. ஆகையால் ஆராய்ச்சிமுறை நம்மவர்களுள் கிடையாதென்பது அறியாமையே. பாலர்கள் கல்விகற்குமளவில் கசடறக்கற்கவேண்டும் அப்பொழுதே ஆராய்ச்சி சரிவரநடைபெறும். ஆராய்ச்சிக்குறிய சிலஉபாயங்களை எனக்கெட்டியவரையில் கூறுகிறேன்:— உலகில் சொற்கள் (रूढं यौगिकं 𑌰𑍂𑌢𑌂 𑌯𑍌𑌗𑌿𑌕𑌂) இடுகுறிப்பெயர் காரணப்பெயர் எனஇருவகைப்படும். தற்காலம் நமதுசாஸ்திரங்களில் காரணச்சொற்கள் மறைந்ததாகவும் இடுகுறிச்சொற்களே விசேஷமாகக் காணப்படுகின்றன. இதற்கு உதாரணமாக நியாயம் கற்கும் ஒருவரை अनुमानं 𑌅𑌨𑍁𑌮𑌾𑌨𑌂 (அநுமானம்என்றபதத்திற்குஎன்னபொருள்என்றால்அப்பதத்தின்பொருளைநன்குதமிழில்விளக்கச்சக்தியற்று परामर्शजन्यं ज्ञानं अनुमितिः 𑌪𑌰𑌾𑌮𑌰𑍍𑌶𑌜𑌨𑍍𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌅𑌨𑍁𑌮𑌿𑌤𑌿𑌃 என்றும் उपाधि 𑌉𑌪𑌾𑌧𑌿 என்றதற்கு आर्द्रेन्धनसंयोगः 𑌆𑌰𑍍𑌦𑍍𑌰𑍇𑌨𑍍𑌧𑌨𑌸𑌂𑌯𑍋𑌗𑌃 என்பதாக இலக்கணத்தைக்கூறினாலும் இவ்விதம் அந்தந்தப் பதங்களுக்குறியபொருள் காலக்கிரமத்தில் லோபித்து உயிரிழந்தவையாக ஆய்விடுகிறது. ஆகையால் ஆராய்ச்சிசெய்பவர்கள் முதலில் அந்தந்த சாஸ்திரங்களில் உள்ள பாரிபாஷிக சப்தங்களின் (இடுகுறிப்பெயரின்) பொருளை நன்கு விளக்கமுயலவேண்டும். இதன் பிறகு வாக்யங்களின் கருத்தை நன்குணர்ந்து அப்பொருளுக்கொத்ததான பதங்கள் அவ்வாக்யத்தில் அமைந்துளவா எனப் பரிசீலனைசெய்யவேண்டும். மேலும் இடத்தினால் பொருள்மாறுபாடடைவதை நாம் காண்கிறோம். உதாரணமாக Rama slew Ravna. Ravana slew Rama. வடமொழியில் அப்படியில்லை. रामो रावणं जघान रावणं रामो जघान 𑌰𑌾𑌮𑍋 𑌰𑌾𑌵𑌣𑌂 𑌜𑌘𑌾𑌨 𑌰𑌾𑌵𑌣𑌂 𑌰𑌾𑌮𑍋 𑌜𑌘𑌾𑌨। மாற்றினாலும் பொருளின் மாறுபா

டில்லைஇங்ஙனமேநமது ஆர்யபாஷையிலும்ஸ்தானத்தினுலும் ஸ்வரத்தினுலும் பொருள்வேறுபடும். இதைஒட்டியே முதலில் வசன காவ்யங்களில் முதலில் பிரயாசைப்பட்டே நடைவரிசைகளைப் படிக்கமுபலவேண்டுமென்பது எனது கொள்கை. இவைகளுள் காவ்ய பரிச்ரமம் மிக முக்கியமானது. அது இல்லாவிடில் क्लीबस्येवास्य कौशलं க்லீபஸ்யேவாஸ்ய கௌஶலம் । என்றபடி நிஷ்பலனுக ஆகிவிடும். ஆகவேதான் காவ்யஜ்ஞானம் ரொம்பமேன்மையென்று விளக்கவே साहित्यं हि सर्वशास्त्रसारनिष्यन्दः ஸாஹித்யம் ஹி ஸர்வஶாஸ்த்ரஸாரநிஷ்யந்த: என்றவைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகையால் ஒவ்வொருவரும் முதலில் காவ்யங்களில் நன்குழைத்துப் பின்னர் சாஸ்திரத்தைப்பயின்று பலருடன்கூடி ஆராய்ச்சிசெய்ய ஆரம்பிக்கவேண்டும், இதற்கென, ஓர் ஆராய்ச்சி சாலை ஏற்படுத்துவதுத்தமமாகும். இவ்விஷயங்களில் பண்டிதர்களின் ஒற்றுமையே முக்கிய காரணமாகும். இக்காரணம்பற்றியே இக்கல்லூரியில் பழயமாணவர் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. ஆகையால் அவரவர்களும் ஒற்றுமையுடன்கூட ஆரம்பித்த இச்சங்கத்தின் நோக்கத்தையும்விரும்பி இந்நோக்கம் ஸபலமடையும்படி செய்வீர்களாக என்றும் பற்பலமேற்கோள்களுடன் கூடின தனது அபாரபாண்டித்யத்தை ஆங்கிலம் வடமொழி தென்மொழிகளோடுகூட பற்பல திருஷ்டாந்தங்களினுல் விளக்கிக்காட்டினுர்கள். சுபம். பிறகு ஷை கல்லூரி நியாயாசரியர் ஸ்ரீமான் விஜயீந்திராசாரியாரவர்கள் உபந்யாஸத்தின் திறமையை மெச்சி அவரவர்களுக்கும் மற்றுமுள்ள பலசிரோமணீ வித்வான் பட்டதாரிகளுக்கு வந்தனமளிக்க சபை இனிது நடந்தேரியது

சுபம் !

கே. ஆர். வைத்தியநாதசாஸ்திரிகள்,
மேலக்காவேரி.

குறிப்பு:— இச்சங்கம் சாச்வதப் பிரஸிடெண்டு அவர்கள் இக்கிரந்த பரிசிலனம் என்னும் உபந்யாஸத்தை மாதமொருமுறை கலாசாலை விடுமுறை தினங்களில் ஸீரிஸ்ஸாக நடத்தத் தீர்மானித்திருக்கிறுர்கள்.